2022 ஏப்ரல் 20]

உடனடியாக நிரப்பி, சத்துணவு மையங்கள் மேலும் சிறப்பாகச் செயல்படுவதற்கு வழிவகுக்குமா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன்–மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மதிய உணவின்போது ஒரு தேங்காய் துண்டு வழங்கலாம் என்று ஆலோசனை கூறினார்கள். அதேபோல, சத்துணவுத் துறையில் காலிப் பணியிடங்களை நிரப்ப வேண்டும் என்று கூறினார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தை இந்த அரசு பரிசீலிக்கும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 137, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பொன்னுசாமி, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

137—

புதைவடங்கள்

***1915—திரு. கே. பொன்னுசாமி:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலை பகுதியில் உள்ள மின்கம்பிகளை பூமிக்கடியில் புதைவடங்களாக மாற்றியமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலை பகுதியில் உள்ள மின் கம்பிகளை பூமிக்கடியில் புதைவடங்களாக மாற்றியமைக்கும்

திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பொன்னுசாமி அவர்கள்.*

திரு. கே. பொன்னுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலை ஒன்றியத்திற்கு 70 கொண்டை ஊசி வளைவுகளை கடந்துதான் செல்ல வேண்டும். கொல்லிமலைப் பகுதி, கடல் மட்டத்தில் இருந்து 1,200 மீட்டர் உயரத்தில் உள்ளது. மழைக் காலங்களில் மழை தொடர்ந்து பெய்தால், காற்று வீசினால் மின்சாரம் தடைபடுகிறது. ஆகவே, மின்தடையைத் தடுக்க 70 கொண்டை ஊசி வளைவுகளில் மின் கம்பிகளை பூமிக்கடியில் புதைவடங்களாக மாற்றியமைக்க வேண்டுமென மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைப் பகுதி என்பதால், வனத் துறை தடையில்லா சான்றிதழ் வழங்கும்பட்சத்தில், இந்தப் பணிகளை மேற்கொள்ள இயலும். இதுபோன்ற காடுகள் சூழ்ந்த இடங்களில் புதைவடங்கள் அமைப்பதற்கும், அவற்றைப் பராமரிப்பதற்கும் அதிக செலவு ஏற்படும். இதுபோன்ற வனப் பகுதியில் பழுது ஏற்பட்டால், அதனைச் சரிசெய்வதற்கு மீண்டும் வனத் துறையின் அனுமதியை பெற வேண்டிய சூழல் இருக்கின்றது. மேலும், கொல்லிமலை பகுதியில் மலைக்குன்றுகள் அதிகமாக உள்ளதாலும், வளைவான சாலைகள் உள்ளதாலும், ஏற்கெனவே உள்ள மேல்நிலை மின்கம்பிகளை புதைவடங்களாக மாற்றியமைக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பொன்னுசாமி அவர்கள்.*

2022 ஏப்ரல் 20]

திரு. கே. பொன்னுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொல்லிமலை அடர்ந்த வனப் பகுதி என்பதை நான் அறிவேன். 70 கொண்டை ஊசி வளைவுகள் இருக்கின்றன. நெடுஞ்சாலையின் ஓரமாக, பூமிக்கடியில் புதைவடங்களாக மாற்றியமைத்தால், காற்றடிக்கும்போதும், மழை பெய்யும்போதும், தடையில்லாமல் மலைவாழ் மக்களுக்கு மின்சாரம் கிடைக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அன்போடு சொல்லிக்கொள்கிறேன்.*

முற்பகல் 10–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேல்நிலை மின்சாரக் கம்பிகளைப் புதைவடங்களாக மாற்றியமைக்கக்கூடிய பணிகள், சென்னை மாநகராட்சியில் பெரம்பூர், தாம்பரம், ஆவடி, அடையாறு உள்ளிட்ட கோட்டங்களில் ரூ.1,011 கோடி மதிப்பீட்டில் தொடங்கப்பட்டு, ஏறத்தாழ ரூ.730 கோடி அளவிற்கான பணிகள் நிறைவு பெற்றிருக்கின்றன. இந்த ஆண்டு செப்டம்பர் மாதத்திற்குள் மேற்குறிப்பிடப்பட்ட கோட்டங்களில் பணிகள் நிறைவு பெறவிருக்கின்றன. முதலில், சென்னை மாநகராட்சியின் விரிவுபடுத்தப்பட்ட அனைத்துப் பகுதிகளிலும் புதைவடக் கம்பிகள் அமைக்கக்கூடிய பணிகளை நிறைவு செய்ய வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மின்சார வாரியத்திற்கு உத்தரவுகளை வழங்கியிருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கக்கூடிய கொல்லிமலைப் பகுதிகளில், சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் நடைபெறும் பணிகள் நிறைவுபெற்ற பிறகு, ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, சாத்தியக்கூறுகளின் அடிப்படையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மின்சாரம் எப்படி எல்லோருக்கும் தேவையோ, அதைப்போல துணைக் கேள்விகளை 15 மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் கேட்டிருக்கிறீர்கள். துணைக் கேள்விகளைக் கேட்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள்*

கேள்விகளை ஒரு second-ல் கேட்டால், பதிலும் விரைவாகக் கிடைக்கும். மேலும் 4 உறுப்பினர்கள் கேள்விகளைக் கேட்கலாம். அந்த அடிப்படையில் துணைக் கேள்விகளைக் கேட்கும் மாண்புமிகு உறுப்பினர்கள் கேள்விகளை மட்டும் சுருக்கமாக ஒரு second-ல் கேட்டு முடிக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. T.K. அமுல் கந்தசாமி அவர்கள்.

திரு. T.K. அமுல் கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். எனது வால்பாறை தொகுதியிலுள்ள அடர்ந்த மலைப் பகுதிகளில் அதிகப்படியான மலைவாழ் மக்கள் வசிக்கின்றனர். அந்த மலைவாழ் மக்களுக்கு மின்சார வசதி கிடையாது. மேலும், வன விலங்குகளும் இடையூறுகள் தந்துகொண்டிருக்கின்றன. ஆகவே, அந்தப் பகுதி மக்களுக்கு மின்சாரம் வழங்குவதில் தடை ஏதும் இருக்குமானால், solar விளக்குகள் அல்லது LED விளக்குகளை அமைப்பதற்கு இந்த அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டு, அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கக்கூடிய வால்பாறை சட்டமன்றத் தொகுதியில் எங்களுடைய துறை அதிகாரிகளை, அலுவலர்களை அனுப்பி, ஆய்வு செய்து, சாத்தியக்கூறுகளின் அடிப்படையில் அதற்கான பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார் அவர்கள்.

திரு. ஐ.பி. செந்தில்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக, மலைப் பகுதிகளில் மின் கம்பிகள் அறுந்து பழுது ஏற்படுகிறபொழுது, அவற்றைச் சரி செய்வதற்கு ஒரு வார காலத்திற்கு மேலாகிறது. மின்சாரம், மக்களுடைய அத்தியாவசியத் தேவைகளில் ஒன்று. மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல, மலைப் பகுதிகளில் இருக்கக்கூடிய பிரச்சினைகளை நாங்கள் அறிவோம்.

2022 ஏப்ரல் 20]

எனவே, மின்சாரத் துறையும், வனத் துறையும் இணைந்து பேசி, அப்பகுதி மக்களுடைய அத்தியாவசியத் தேவையான மின்சாரம் அவர்களுக்குத் தடையின்றி கிடைக்க, புதைவடக் கம்பிகள் வழியாக மின் தேவையை அவர்களுக்குப் பூர்த்தி செய்து கொடுக்க அரசு முன் வரவேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டு, அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக, மலைப் பகுதிகளில் மேலே செல்லக்கூடிய மின் கம்பிகளைப் புதைவடங்களாக மாற்றுவது என்பதைவிட, அவற்றைப் பராமரிக்கும்பொழுதும், அதற்கான அனுமதிகளைப் பெறுகின்றபொழுதும், சிக்கல்கள் நிறைய உள்ளன. இனிவரக்கூடிய காலங்களில் எந்தெந்த மலைப் பகுதிகளில் மிக அவசியம் என்பதைக் கவனத்தில்கொண்டு, அதற்கான நிதி ஆதாரங்களையும் உருவாக்கக்கூடியபட்சத்தில், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தினை அரசு கவனத்தில் கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர். காந்தி அவர்கள்.*

திரு. எம்.ஆர். காந்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகர்கோவில் மாநகராட்சிப் பகுதிகளில் மின்வெட்டைச் சரி செய்வதற்காகவும், அவற்றைப் பராமரிப்பதற்காகவும் அடிக்கடி மரங்களையெல்லாம் வெட்டி விடுகிறார்கள். ஆகவே, பசுமையான மாநகராட்சிப் பகுதியில் மின்சாரக் கம்பிகளையெல்லாம் பூமிக்கு அடியில் புதைவடங்களாக மாற்றியமைத்தால், அந்தப் பசுமையான பகுதிகளில், மரங்கள் வெட்டப்படாமல் இருக்கும் என்பதைக் கருத்தில்கொண்டு, அந்தப் பகுதியிலுள்ள மின் கம்பிகள் புதைவடங்களாக மாற்றியமைத்துத் தரப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் சீரான மின் விநியோகம் செய்வதற்காக 200 இடங்களில் புதிய மின் மாற்றிகள் அமைப்பதற்கான உத்தரவுகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கி, அந்தப் பணிகள் நிறைவு செய்யப்பட்டு, இப்போது பயன்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டிருக்கின்றன. நாகர்கோவில் சட்டமன்றத் தொகுதியில் மட்டும் 31 இடங்களில் புதிய மின்மாற்றிகள் அமைக்கப்பட்டு, பணிகள் நிறைவு பெற்றிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர். காந்தி அவர்கள் சுட்டிக்காட்டிய நாகர்கோவில் பகுதியில் மின் கம்பிகளைப் புதைவடங்களாக மாற்றக்கூடிய பணிகளைப் பொறுத்தவரையில், முதலில் சென்னை மாநகராட்சியில் உள்ள பணிகளை முழுவதுமாக நிறைவு செய்ய வேண்டுமென்பதுதான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய உத்தரவு. அந்த உத்தரவின் அடிப்படையில்தான் ரூ.1,011 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, ஏறத்தாழ ரூ.230 கோடிக்கான பணிகள் நிறைவு செய்யப்பட்டிருக்கின்றன.*

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் புதைவடங்கள் அமைக்கும் பணிகள் நிறைவுற்ற பிறகு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலைப் பெற்று, அடுத்தகட்ட பணிகளை மேற்கொள்ளும் நேர்வில், நாகர்கோவில் மாவட்டம் கவனத்தில் கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. இராசேந்திரன் அவர்கள்.*

திரு. சபா. இராசேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெய்வேலி சட்டமன்றத் தொகுதியில் வீடுகளின் மேலாகச் செல்கின்ற* HT, LT *மின்பாதைகளை அரசு செலவிலேயே மாற்றித் தர வேண்டும் என்பது, அந்தப் பகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையாக இருந்து வருகிறது. அதை மாற்றியமைப்பதற்கு மின்*

2022 ஏப்ரல் 20]

துறையை அணுகுகின்றபோது, shifting charges ஆக பல இலட்சம் ரூபாயைக் கட்டச் சொல்கிறார்கள். எனவே, பொருளாதாரத்தில் பின்தங்கிய பகுதியில் வசிக்கின்ற மக்கள் அந்தக் கட்டணத்தைக் கட்ட முடியாமல் சிரமப்படுகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, ஒரு இலட்சம் மின் இணைப்புகளை record time–ல் கொடுத்திருக்கிற நமது மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் மனது வைத்தால், இந்த மின் பாதையை அரசு செலவிலேயே மாற்றிக் கொடுக்க முடியும். அதைச் செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தெந்த இடங்களில் அவ்வாறு மாற்றியமைக்கப்பட வேண்டும் என்று எழுத்துபூர்வமாக என்னிடத்தில் வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களது கடிதத்தின் அடிப்படையில் துறைக்கு அனுப்பி, ஆய்வு செய்து, அதன் பிறகு அவற்றிற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ் அவர்கள்.

திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் மாவட்டம் புயலால் பாதிக்கப்படுகின்ற மாவட்டம். ஒவ்வொரு புயலின்போதும் அங்கிருக்கக்கூடிய மின் கட்டமைப்புகள் முற்றிலும் நிலைகுலைந்து போவதைப் பார்த்து வருகிறோம். எனவே, புதைவடக் கம்பிகள் அமைப்பதில் நாகப்பட்டினத்திற்கு முன்னுரிமை வழங்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

[2022 ஏப்ரல் 20

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இயற்கைச் சீற்றங்களால் பாதிக்கப்படக்கூடிய நாகப்பட்டினம், கடலூர் உள்ளிட்ட மாவட்டங்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மின்சார வாரியத்திற்கு வழிகாட்டுதலை வழங்கியிருக்கின்றார். அவருடைய வழிகாட்டுதலின்படி சென்னை மாநகராட்சிப் பகுதி பணிகள் நிறைவு பெற்ற பிறகு, நாகப்பட்டினம், கடலூர் மாவட்டங்களில் இருக்கக்கூடிய பணிகள் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதி பெற்று, அவற்றிற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன் அவர்கள்.

திரு. துரை. சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப் போன்று சென்னை மாநகரப் பணிகளை முடித்து, கடலூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டப் பணிகளை மேற்கொள்கின்றபோது, தமிழகத்தில் குறிப்பாக, திருவையாறு, திருவாரூர், திருவிடைமருதூர் மற்றும் காஞ்சிபுரம் போன்ற புகழ்பெற்ற தேரோடும் வீதிகள் உள்ள நகரங்களில், தேரோடும் வீதிகளில், தனி நேர்வாக புதைவடக் கம்பிகள் அமைப்பதற்கு அரசு முன்வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவ்வாறு தேரோடும் வீதிகளில் மேலே செல்லக்கூடிய கம்பிகளை புதைவடங்களாக மாற்றும் பணிகள் எடுத்துக்கொள்வதன் முதல் கட்டமாக, திருவாரூர் தேரோட்டத்தில் பாதிப்புகள் ஏற்படாமல் சிறந்த முறையில் தேரோட்டம் நடைபெறுவதற்காக, 27 கோடி ரூபாய் மதிப்பில் அப்பணிகளை மேற்கொள்ள வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவு வழங்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆண்டே அப்பணிகள் தொடங்கப்பட இருக்கின்றன. மேலும்,

2022 ஏப்ரல் 20]

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கின்ற மீதம் இருக்கக்கூடிய பகுதிகளிலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் முன் அனுமதி பெற்று, அதன்மீது துறையின் சார்பாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. A.K. செல்வராஜ் அவர்கள்.*

திரு. A.K. செல்வராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் உங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேட்டுப்பாளையம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சிக்கடாசாம்பாளையம் கிராமம், தொழிற்சாலைகள் நிறைந்த, தொழில்கள் நிறைந்திருக்கின்ற ஒரு கிராமம். இங்கு பல புதிய தொழிற்சாலைகள் வந்தவண்ணம் இருக்கின்றன. இங்கு அடிக்கடி குறைந்த மின் அழுத்தம் ஏற்படுகின்றது. இந்தக் கிராமத்தின் வடவெள்ளி என்ற ஊரில் க.ச. எண் 546/1-ல் 2.88 ஏக்கர் நிலம் வழங்குவதற்குத் தயாராக இருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 110/22 KV துணை மின் நிலையத்தை அமைக்க முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

முற்பகல் 11–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீரான மின் விநியோகத்திற்காக, கடந்த ஆண்டு 216 துணை மின் நிலையங்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கின்றார்கள். இந்த ஆண்டு எந்தெந்தப் பகுதிகள் விடுபட்டிருக்கின்றன என்பது துறை வாரியாகவும் கணக்கெடுக்கப்பட்டிருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கின்ற பகுதியிலும் துறையின்வாயிலாக ஆய்வுகள் மேற்கொண்டு, தேவை ஏற்படின் அதுகுறித்துப் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.எம்.வி. பிரபாகரராஜா அவர்கள்.*

திரு. எ.எம்.வி. பிரபாகரராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருகம்பாக்கம் தொகுதியைப் பொறுத்தவரை, அதிகமான மக்கள்தொகை உள்ள தொகுதியாக இருந்து கொண்டிருக்கிறது. குறிப்பாக, கடந்த காலங்களில் புதைவட மின் கம்பிகள் அமைக்கும் பணிகள் மெத்தனமாக நடந்ததால், வெறும் 37 சதவிகித பணிகள்தான் நிறைவடைந்திருக்கின்றன. குறிப்பாக* Joint houses *என்று சொல்வார்கள், ஒட்டு வீடுகள் அதிகமாக இருக்கக்கூடிய பகுதியாக உள்ளது. எம்.ஜி.ஆர். நகர், சூளைப்பள்ளம், கே.கே. நகர், சாலிகிராமம் ஆகிய பகுதிகளில் புதைவட மின் கம்பிகள் அமைக்கும் பணியை அரசு விரைந்து செயல்படுத்துமா என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல், சாலிகிராமத்தில் ஸ்ரீராமர் கோயில் தெரு இருக்கிறது. அங்கு புதைவடக் கம்பிகளை அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் கேட்டேன். 24 மணி நேரத்தில் அமைத்துக் கொடுத்தார்கள். அதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் இத்தருணத்தில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கக்கூடிய விருகம்பாக்கம் தொகுதியில், செப்டம்பர் மாதத்திற்குள் அந்தப் பணிகள் முழுவதுமாக நிறைவு செய்யப்பட வேண்டுமென்பது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய உத்தரவு. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, அந்தப் பணிகள் விரைவாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன; விரைந்து முடிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 138, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரி. செந்தில்நாதன், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*